யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 29 செவ்வாய்க்கிழமை (14-09-1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 290


# மீனவரை தாக்கிய கடற்படை கடற்புலிகளால் விரட்டியடிப்பு

## வடமராட்சிக் கடற்பகுதியில் நேற்றுக் காலையில் சம்பவம்

வடமராட்சி, செப்டெம்பர் 14

**வடமராட்சிக் கடற்பகுதியில் நேற்றுக் காலை 5.30 மணியளவில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது தாக்குதல் நடத்திய கடற்படையினரை கடற் புலிகள் தாக்கி விரட்டியடித்தனர்.**

கிழக்குப் பகுதியிலிருந்து பருத்தித்துறை முனைப்பக்கமாக பீரங்கித் தாக்குதலை நடத்தியபடி இருவிசைப் படகுகளில் வந்த கடற்படையினரே வடமராட்சி வடக்கு கடற்பகுதியில் காணப்பட்ட மீனவர்களை நோக்கித் தாக்குதல் நடத்தினர்.

சக்கோட்டை, பொலிகண்டி பகுதியில் கரையோரமாக மீன்

(5ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையின் தாக்குதலில் 2மீனவர்கள்பலி; ஒருவர்காயம்

### மீன்பிடி உபகரணங்களும் நாசம்

வடமராட்சி, செப். 14

வடமராட்சிக் கடற் பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் நேற்றுக் காலை நடத்திய தாக்குதலில் இரு மீனவர்கள் உயிரிழந்தனர்; மற்றொரு மீனவர் காயமடைந்தார்; பல்லட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் நாசமாகின.

கட்டுமரங்களில் சென்று கரையோரங்களில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

திடீரென வந்து தாக்குதல் நடத்திய கடற்படையினரைக் கண்டதும், மீனவர்கள் அவசர அவசரமாக கட்டுமரங்களை கரையை நோக்கித் திருப்பி விரைந்து கரைக்கு வந்து சேர்ந்தனர்.

சக்கோட்டை கடற்பகுதியில் கட்டுமரத்தில் சென்ற இரு மீனவர்கள் மீது நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதலில் அவர்களில் ஒருவர் பலியானார். மற்றொருவர் காயத்துடன் நீந்திக் கரை சேர்ந்தார்.

பலாலியிலிருந்து இடம்

(5 ஆம் பக்கம் பார்க்க)

# கடல் தடைச்சட்டம்: இந்தியா ஆட்சேபம்

## ஸ்ரீ லங்கா மீது குற்றச்சாட்டு

சென்னை. செப். 14

ஸ்ரீலங்கா அரசு வடபகுதிக் கடற்பிராந்தியத்தில் படகுகள், கப்பல்கள் செல்வதற்குத் தடை விதித்து வெளியிட்ட பிரகடனத்தை இந்தியா ஆட்சேபித்திருக்கிறது.

இது தொடர்பாக இந்தியாவின் கவலையை வெளியுறவுத் துறை அதிகாரி ஒருவர் நேற்று புதுடில்லியில் வெளியிட்டார்.

ஸ்ரீலங்கா அரசின் பிரகடனம், இந்தியக் கப்பல்களும் படகுகளும் அப்பகுதியில் செல்வதற்கான உரிமைகளை மறுப்பதாகவும் —

சர்வதேச கடல் சட்டத்தை ஸ்ரீலங்கா அரசின் பிரகடனம் மீறுவதாகவும் இந்திய அரசு ஸ்ரீ லங்கா அரசிடம் சுட்டிக்காட்டியிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

இந்திய அரசுக்குத் தெரியக் கூடியதாகத்தான் மேற்படி கடல் தடைச்சட்டப் பிரகடனத்தை ஸ்ரீலங்கா அரசு பிறப்பித்தது என்று பத்திரிகைகளில் வெளியான செய்திகள் சரியானவை அல்ல என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

"கச்சதீவுப் பகுதியில் இந்திய மீனவருக்கு நெடுங்காலமாக — வழி வழியாக இருந்து வரும் உரிமைகளை இலங்கை

[5ஆம் பக்கம் பார்க்க]

# தியாகி திலீபன் நினைவு நிகழ்வுகள் நாளை உணர்வு பூர்வமாக ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 14

தமிழீழ மக்களுக்காகத் தன்னுயிர் ஈந்த தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஆறாவது ஆண்டு நினைவு தினம் நாளை முதல் உண்ணாவிரதம், சிரமதானப் பணிகள் ஆகிய நிகழ்வுகளுடன் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படவிருக்கிறது.

நாளை முதல் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை இடம் பெறும் நினைவுதின நிகழ்வுகளுக்காக தமிழீழம் எங்கும் விசேட பந்தல்களும், பதாகைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

நாளை தொடக்கம் பல்வேறு இடங்களில் அடையாள உண்ணாவிரதங்கள் நடைபெறவிருக்கின்றன.

வட்ட ரீதியாக அடையாள உண்ணாவிரதங்கள் நடைபெறும் இடங்களின் விபரங்கள் வருமாறு:—

★ சங்கானை — [illegible] வைரவர் ஆலய முன்றில்.

★ கோப்பாய் — நீர்வேலி வாய்க்கால்தரவை பிள்ளையார் கோவில் முன்றில்.

★ சண்டிலிப்பாய் — ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் ஆலய முன்றில்.

★ உடுவில், தெல்லிப்பழை — சுன்னாகம் சிவன் கோவில் முன்றில்.

★ யாழ்ப்பாணம், நல்லூர் [illegible]

([illegible] பக்கம் பார்க்க)

## கொலை என தீர்ப்பு

கொழும்பு, செப். 14

கடந்த 6ஆம் திகதி மஹர சிறையிலிருந்து கைதிகள் தப்பியோட முற்பட்ட போது சிறைக் காவலர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் உயிரிழந்ததாகக் கூறப்படும் ஐந்து கைதி

(5ஆம் பக்கம் பார்க்க)

## போர்முனை சென்றாலே படையினருக்கு பதவிஉயர்வு!

கொழும்பு, செப். 14

படை அதிகாரிகள் போர்முனைக்குச் சென்று பணிபுரிவதை ஊக்குவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதிகாரிகளுக்கு சேவை மூப்பின் அடிப்படையில் பதவி உயர்வுகளை வழங்குவதை நிறுத்தி, கள நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கே வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா இதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

படையினரைச் செயல்திறமை உள்ளவர்கள் ஆக்குவதே புதிய மாற்றத்தின் நோக்கம் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

போர்முனைக்குச் செல்வதற்குப் பின்னடிக்கும் அதி

(6ஆம் பக்கம் பார்க்க)

சரித்திர முக்கியத்துவம் மிக்க

## இஸ்ரேல் - பலஸ்தீனிய ஒப்பந்தம் கைச்சாத்து

வாஷிங்டன், செப். 14

இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட காஸா மற்றும் ஜெரிக்கோ நகர் ஆகியவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி வழங்கும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இஸ்ரேல் — பலஸ்தீன ஒப்பந்தம் நேற்றிரவு கைச்சாத்திடப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான வெள்ளை மாளிகையில் இந்நிகழ்ச்சி இடம்பெற்றது.

இஸ்ரேலின் சார்பில் அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஷிமோன் பெரஸும் — பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் சார்பில் அதன் இரண்டாம் நிலைத் தலைவரான மஹ்மூத் அப்பாஸும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## 'நரோமா' கப்பல் மீண்டும் சேவையில்

யாழ்ப்பாணம், செப். 14

இடைநிறுத்தப்பட்டிருந்த 'நரோமா' பயணிகள் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலைக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் சேவை நடத்தி வந்த 'நரோமா' கப்பல் திருத்த வேலைகளுக்காக கடந்த இரு வாரங்களாக சேவையை இடைநிறுத்தியிருந்தது.

இன்று காலை ஒருதொகுதி பயணிகளுடன் காங்கேசன் துறை வரும் இக்கப்பல், கொழும்பு செல்லும் 21 அரச ஊழியர்களை ஏற்றிக் கொண்டு இன்று மாலை திருகோணமலைக்கு செல்லும்.

தொடர்ந்து பிரதி செவ்வாய்க்கிழமைகளில் இச்சேவை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது

(உ-8)

பெரும்போக நெற்செய்கை

## 400 விவசாயிகளுக்கு கடன் மக்கள் வங்கி வழங்கும்

யாழ்ப்பாணம், செப். 14

யாழ். மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கைக்கு நானூறு விவசாயிகளுக்கு மக்கள் வங்கி கடன் வழங்கவிருக்கிறது.

மக்கள் வங்கியின் வட பிராந்திய முகாமையாளர் திரு ஆர். அருளானந்தன் இத்தகவலைத் தெரிவித்தார்.

90 ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் மக்கள் வங்கியால் இத்தடவை கூடிய எண்ணிக்கையான விவசாயிகளுக்கு கடன் வழங்கப்படவிருக்கிறது.

சாவகச்சேரி, கோப்பாய், உடுவில், கரவெட்டி, யாழ்ப்பாணம் உதவி அரச அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு இக்கடன் வழங்கப்படவிருப்பதாகவும் —

அந்தந்தப் பகுதி உதவி அரச அதிபர்களின் சிபார்சின் படி இக்கடன் வழங்கப்படவிருப்பதாகவும் — பிராந்திய முகாமையாளர் தெரிவித்தார்.

கடன்வழங்கும் வேலைகள் தொடர்பான கூட்டம் ஒன்று நாளை நடைபெறவிருக்கிறது.

(உ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி


## திரு. அல்பேர்ட் துரைசிங்கம்

10-9-93இல் மரணமடைந்த திரு. அல்பேர்ட் துரைசிங்கம் அவர்களின் திடீர் மறைவையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தையும் கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/ இ. மகளிர் ஆரம்ப பாடசாலை.

(27805)

# 5th YEAR REMEMBRANCE



IN TREASURED MEMORY OF
**SHIRLEY JEYARUBAN LAWRENCE**

BLOOMED: 05 – 09 – 1966
FADED: 14 – 09 – 1988

"Blessed are the dead which die in the Lord from hence forth"
(Reve 14 : 13)

Precious forever are memories of you Darling SHIRLEY


Fondly remembered by your ever loving
Dadda, Mommy Shereen, Athi, Nivedha, Maureen, Morley, Dalreen, Friends, and loved ones.

"Dulcilyn",
Nagalingam Terrace,
Mahipay.

(6472)

# ஓராண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 20 | | 26 |
| — | | — |
| 10 | | 08 |
| — | | — |
| 1918 | | 1992 |



## அமரர் நாகலிங்கம் தம்பிராஜா

(மல்லாகம் நீதிமன்ற ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்)

திதி: 14 – 09 – 1993

வானத்து வெண்ணிலவாய்; வாழ்வின் -
பொன்னொளியாய்;
வளமார் வாழ்வளித்து; வானுயர் நெறியோடு
தானமிகு நீதிமன்றில் தானே முன்னின்று
தமர் பிறர் என்று சிறிதேனும் பாராது
ஆனமட்டும் நீதியாய் அரும்பணி புரிந்து
அனைவரையும் அன்புடன் ஆதரித்தீரையா!
கனப் பிறையோன் கழலடி காணவோ
கடுகிவிட்டு எம்மைக் கடந்து போனீரையா?

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.

கைலாய வைரவர் கோவிலடி,
நீதிமன்ற ஒழுங்கை,
மல்லாகம்.
14-09-1993

(6650)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 14
நாளை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த ஆரம்பக்கல்வி தொடர்பான அதிபர்கள், பகுதித் தலைவர்கள் ஆகியோருக்கான சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்கு ஒத்திவைக்கப்பட்டு நாளை மறுதினம் நடைபெறும் என்று வடமராட்சி கோட்ட கல்வி அதிகாரி அறிவித்துள்ளார்.

## ஆலயங்களில்

திறீவல்லிபுர ஆழ்வார் ஆலய உற்சவம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (க-109)

o o o

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மாள் ஆலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நவகுண்ட பக்ஷ நவோத்திர அகண்திர சங்காபிஷேகம் திரு. சி. ஆறுமுகக் குருக்களால் நடத்தப்படும் நாளை புதன்கிழமை பூர உற்ஸவம் மாலை 5 மணிக்கு நடைபெறும். (க)

## விளையாட்டு நிகழ்வுகள்

அமரர் ஆனாலசுந்தரம் ஞாபகார்த்த கேடயத்திற்காக அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம் கழக மைதானத்தில் நடத்தி வரும் — 30 ஓவர்களைக் கொண்ட — மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் ஆட்டத் தொடரில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறும் ஆட்டம் ஒன்றில் யாழ்ப்பாணம் ஜெகலி ஸ்ரார்ஸ் அணியை எதிர்த்து கிறான் கொப்பர்ஸ் அணி மோதும்.

o o o

காரைநகர் தோப்புக்காடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தொழில்நுட்ப நிறுவன மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.30 மணி:- சில்வர் ஸ்ரார் அணி எதிர் அராலி மாவத்தை வி.க அணி

★ 4.30 மணி:- எவ்கா வி.க அணி எதிர் சென்.றோக்ஸ் வி.க அணி.

o o o

யாழ்.மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாஜத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள "ஓவர்-கேம்" முறையிலான கரப்பந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று மாலை நல்லூர் ஜனசக்தி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் சனசமூக நிலைய அணிகள் வருமாறு:-

★ 3 30 மணி:- அரியாலை சாந்தி அணி எதிர் நாவாந்துறை சென்.மேரீஸ் அணி

★ 4.30 மணி:- அரியாலை சரஸ்வதி அணி எதிர் நாயன்மார்கட்டு பாரதி மன்ற அணி

o o o

யாழ்.மாநகர சபை சனசமூக நிலையங்களின் சமாஜம் நடத்தும் வலைப்பந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று மாலை யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலய ஆடுகளத்தில் நடைபெறும் அரையிறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ அரியாலை ச.ச. நிலைய அணி எதிர் நாவாந்துறை சென்.நிக்கிலஸ் ச.ச. நிலைய அணி.

★ பாஷையூர் சென். அன்ரனீஸ் ச.ச. நிலைய அணி எதிர் அரியாலை திருமகள் ச.ச. நிலைய அணி.

o o o

கன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் மூன்று மணி முதல் சினேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன.

ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் இரண்டாம், மூன்றாம் பிரிவு அணிகள் [illegible] மகா வித்தியாலய அணிகளுடனும், முதலாம் பிரிவு அணி ஸ்கந்தா ஐக்கிய வி.க அணியுடனும் மோதும்.

உ
சிவமயம்

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் ஆவணி 30ஆம் நாள் (15-09-1993) புதன்கிழமை காலை 7-30 மணி தொடக்கம் 9மணி வரையில் வரும் ★ சுபமுகூர்த்தத்தில் ★

எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி

## உஷாநந்தினி

அவர்களுக்கு

பூப்புனித நீராட்டுவிழா நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,
தங்கள் நல்வரவை நாடும்:
க. சுந்தரலிங்கன் தம்பதிகள்.

பூநாறி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(27288)


வெலிங்டன் சந்திக்கருகில்!




# UNIKCO
## COMPUTER CENTRE

Computer பயிற்சி நெறிகள்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

★ BASIC Language (Including Graphics, Sound & Files)
★ PASCAL Language (பல்கலைக்கழகம் செல்ல விருப்பவர்கட்கு மட்டும்)
★ d BASE III PLUS and MS - DOS
★ LOTUS 1-2-3 and MS - DOS
★ WORD PROCESSING (Word Star Rel - 5. 5) and MS – DOS

வார நாள் வகுப்புகள் ஆரம்பம்:- 17-09-1993 – 3-00 P.m
வார இறுதி வகுப்புகள் ஆரம்பம்:- 18-09-1993 – 3-00 P.m

Equipment Used: ACER, ARC Computers (IBM Compatibles)


கட்டணங்கள் தவணை முறையில்

மேலதிக விபரங்கட்கு;
37, CLOCK TOWER ROAD, JAFFNA.

(C/6097)


# 6ஆம் ஆண்டின் நினைவில்

| பிறப்பு: | | இறப்பு |
|---|---|---|
| 12 | | 14 |
| — | | — |
| 05 | | 09 |
| — | | — |
| 1937 | | 1987 |



## மனுவல் றொபேட்ஸ்

(றுபட்)

முவிரண்டாண்டுகளாய் - உன்
முத்தமழை இழந்தோம்
வாடிடும் பயிராகி
கோடி பலன் இழந்தோம்

தேடுகின்றோம் எந்தையே!
உன்வரவை நாடி - நீ
ஓடிவிட்டாய் - இறைவனின்
கருணை மழை தேடி

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்.

57, வாலுடையார் வீதி,
யாழ்ப்பாணம்.

(27306)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடற் பயிற்சி ஆசான்

# திரு. அ. தம்பித்துரை மணிவிழா சிறப்பிதழ்

## உடற் பயிற்சிக் கலைக்கு தன்னை அர்ப்பணித்தவர்


இருபது ஆண்டுகளுக்கு முன்பு காங்கேசன்துறை வீதி வழியாக அடிக்கடி பயணம் செய்யும் போது நான் கண்ட காட்சிகள் ... மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் முன்றல். மாணவர்கள் காலையும், மாலையும் அணிவகுத்து நிற்கும் காட்சி; உடற்பயிற்சி புரியும் திறன்; புன்முறுவலும், அதே நேரத்தில் கண்டிப்பும் தொனிக்கும் கட்டளைகள்; சில நாட்கள் செல்ல ... பத்திரிகையில் மல்லாகம் மகா வித்தியாலயம் உடற்பயிற்சிப் போட்டியில் முதலிடம் பெற்றது என்ற செய்தி; இவற்றை இந்த இடத்தில் நினைவு படுத்தித்தான் பெரியார் அ. தம்பித்துரை அவர்களை வாழ்த்த முற்படுகின்றேன்.

இவர் ஓர் அதிசயப் பிறவி; யோகசீலர்; தான் மேற்கொண்ட பணிக்கு தன்னை முற்றாக அர்ப்பணிப்பவர். இதனால் அனைவருடைய அன்பையும், பாராட்டையும் நிரப்பப் பெற்றவர்.

இப்பெரியாரின் ஆளுமை நிறைந்த வழி காட்டலினால் மல்லாகம் மகா வித்தியாலயம், உரும்பராய் இந்துக்கல்லூரி, அருணோதயாக் கல்லூரி ஆகியவை கல்வி உலகுக்கு பிரசித்தப்படுத்தப்பட்டன.

அவருக்கு எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்!

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J. P.
தலைவர்,
துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.



அ. தம்பித்துரை

மணிவிழா 30.09.93 வியாழன் பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் இந்துக் கல்லூரியில் இடம் பெறும்.

## அகில இலங்கை ரீதியில் வெற்றிகளைக் குவித்தவர்

1955 லிருந்து 1988 வரை 33 ஆண்டுகள், யாழ். மாவட்டத்திலேயே உடற்பயிற்சி ஆசிரியராகப் பணி புரிந்து, அகில இலங்கைப் போட்டிகளில், எமது மாவட்டத்துக்கு விருது கிடைக்கச் செய்த வழிகாட்டி திரு. அ. தம்பித்துரை.

அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியிலும் பாடசாலைச் சமூக வட்டங்களிலும் இவரது சாதனைகள் உடற்பயிற்சித்துறைக்கு உத்வேகத்தை உண்டாக்கியதை உணர முடிந்தது. குறிப்பாக — மல்லாகம் இந்துக்கல்லூரி, அருணோதயாக் கல்லூரி, உரும்பிராய் இந்துக்கல்லூரி — உடற்பயிற்சி அணிகள், இவரது சேவைக்காலத்தில் அகில இலங்கை ரீதியாக வெற்றியீட்டியமை நினைவிலிருத்த வேண்டியவையாகும்.

ஆசிரியரது பயிற்சியணிகள் வீரசாகச விளையாட்டுகளையும், தசைப் பயிற்சிகளையும் காட்சி நிகழ்ச்சிகளாக அரங்கேற்றியமையைக் கண்டு வியந்தோரில் நானும் ஒருவன்.

மாணவர்களைப் பம்பரம்போல, உணர்வுபூர்வமாக இயங்க வைக்கும் திறன் தம்பித்துரை அவர்களுக்கே உரித்தான கைவண்ணமாகும்.

இவரது அனுபவங்களைப் புதிய தலைமுறையினர் நன்கு கற்றறிந்து, பயன்படுத்துவர் என்பது திண்ணம் இன்றுபோல் என்றும் இளமை குன்றாது உடற்பயிற்சி அளிக்கவல்ல வல்லமையை எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு அருள்வாராக!

இ. சுந்தரலிங்கம்,
வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்.

## ஆசிரிய சேவையில் சாதனையாளன்

ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறியுள்ள திரு. அ. தம்பித்துரை அவர்களைக் கௌரவித்துப் பாராட்டும் விழா நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். சமூகத்தில் நற்பிரசைகளை உருவாக்கும் அரும் பணியில் ஈடுபட்டு விசுவாசத்துடன் உழைத்த இவ்வகை ஆசிரியர்களைக் கௌரவித்து நன்றி செலுத்த வேண்டிய கடப்பாடு மக்களைச் சார்ந்தது.

பாடசாலையில் மாணவர்களை நற்பிரசைகளாகவும் சமுதாயத்திற்குப் பொருத்தப்பாடுடையவர்களாகவும், வளர்த்தெடுக்க வேண்டுமென்பதற்காக அயராது உழைப்பவர் ஆசிரியர் தம்பித்துரை. அந்த முயற்சியில் தமது ஆசிரிய சேவையை நன்கு பயன்படுத்தி அவர் வெற்றியும் கண்டுள்ளார்.

தாம் கடமையாற்றிய மூன்று இராமப்புறப் பாடசாலைகளிலும் உடற்கல்வித்துறையில் சாதனைகள் புரிந்தவர் திரு. தம்பித்துரை அவர்கள்.

இராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களையும் ஆசிரியரது விசுவாசத்தாலும், அயராத உழைப்பாலும், முன்னிலைக்குக் கொண்டுவரலாம் என்பதை அவர் நிரூபித்துள்ளார்.

இவ்வகை ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுச் செல்வது எமது கல்வித் துறைக்குப் பேரிழப்பாகும். ஓர் ஆசிரியன் என்ற வகையில் தம்பித்துரை அவர்கள் தனது கடமைகளைத் திருப்திகரமாகச் செய்துள்ளார். அந்த வகையில் ஓய்வுபெற்ற காலத்திலும் அவருக்கு மன நிறைவும், சுகமும் கிடைக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

திரு. இ. சிவானந்தன்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
மருதனார்மடம்.

## உண்மை வீரர்களை உருவாக்கியவர்

அடங்கி நடவாமை (Disobedience) தன்னிச்சையில் செயல்படுதல் (Selfishness), சோம்பல் Laziness) ஆகியன ஒரு விளையாட்டு வீரனுக்குக் "களங்கத்தை" உருவாக்கி அவனைச் சார்ந்த அணிகளையும் தோல்வி காணச் செய்கின்றன. இளமையிலேயே இத்தகைய தன்மைகளை வேருடனகற்றி, விளையாட்டுத் துறைக்கும், சமூகத்துக்கும் சிறந்த உண்மையான வீரர்களை வழங்கும் "பாசறை நிகழ்ச்சிகளாக" அமைந்தவைதான் அணிவகுப்பும் உடற்பயிற்சிப் போட்டிகளும்.

இப்பாசறை நிகழ்ச்சிகளுக்கு உயிர்கொடுத்து — உயர்த்தியவர்களில் ஒருவர் ஆசிரியர் திரு. அ. தம்பித்துரை அவர்கள். பெரியார் உடற்பயிற்சி மூலம் "இசைவாக்கம்" என்றால் என்ன என்பதை மாணவர் மனதில் நன்கு பதித்து, விளையாட்டுத்துறைக்கும், சமூகத்திற்கும் நல் மாணவ மணிகள் கிடைக்க பெருதவியாக இருந்து வருகிறார்.

'சூரியன் மறைவது இல்லை'' — அதுபோல ஆசிரியர்சேவை அரசபணி ஆகியவற்றிலிருந்து விலகினாலும் சமூகப் பணியில் அவர் ஒளிவீசித் தொடரவும் நீண்ட ஆயுளும், சுகவாழ்வும் அவருக்குக் கிடைக்கவும் இறைவனை இதயத்தால் இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

— வி. கே. சண்முகலிங்கம்.
விளையாட்டுத்துறைப் பயிற்சியாளர்
யாழ் கனகரத்தினம் ம. ம. வி

## கழகத்தின் செழுமைக்கு வற்றாத ஜீவநதி

தமது நீண்ட அயராத உழைப்பின் பின் இளைப்பாறிய உடற்கல்வி ஆசான், உயர்திரு அ. தம்பித்துரை அவர்கள், கடந்த பல ஆண்டுகளாக சுன்னாகம் மயிலணி வடக்கு வளர்பிறை விளையாட்டுக் கழகத்தின் வளர்ச்சிக்கு வற்றாத ஜீவநதியாக — தன்னலம் கருதாது, அறிவுசால் ஆலோசகராகவும், வளப்படுத்தும் வழிகாட்டியாகவும் நற்பணிகள் பல புரிந்து வருகின்றார் என்றால் அது மிகையாகாது.

எமது கழக வருடாந்த மெய்வன்மை, சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், கரபந்து, உதைபந்து, கிளித்தட்டு — போன்ற சகல போட்டிகளுக்கும் பிரதம தீர்ப்பாளராகக் கடமையேற்று தம்பணியை, நடுநிலை தவறாது திறமையுடன் நிறைவு செய்து போட்டியாளரினதும், பார்வையாளரினதும் பாராட்டுகளையும் பெற்றுக் கொள்ளும் பெரியார் இவர்.

எல்லோருடனும் ஏற்றத்தாழ்வின்றி எளிமையாக — இனிமையாக — பழகுவதன் மூலம் சகலரினதும் உள்ளங்களிலும் அழியா உருவம் பெற்றவர். யாழ். குடாநாட்டில் மட்டுமன்றி அகில இலங்கையிலும் பாராட்டைப் பெற்ற பயிற்சியாளர் வயது முதிர்ந்தும் இளைஞனைப் போல் தோற்றமளிக்கும் இவர், மேலும் பல்லாண்டு காலம் சுகதேகியாக வளமுடன் வாழ்ந்து, நமக்கும், நாட்டுக்கும் நற்தொண்டாற்ற முருகப்பெருமானை வேண்டி, இப்பெருமகனை உள்ளங்கனிந்து வாழ்த்துவதில் பெருமையும் பெருமகிழ்ச்சியுமடைகிறோம்.

-நிர்வாகிகள்,
வளர்பிறை விளையாட்டுக்கழகம்.
[மயிலணி வடக்கு, சுன்னாகம்.]

## தனி முத்திரை பதித்த பயிற்சியாளர்

நல்லாசிரியச் செம்மல் திரு. அ. தம்பித்துரை அவர்களுக்கு மணிவிழா எடுத்தல் மகிழ்ச்சிதரும் நிகழ்ச்சி ஆகும்.

மலைநாட்டில் ஆங்கில உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய அனுபவமும், பின்னர் சென்னை வை. எம். சி. ஏ நிறுவனத்தில் உடற்பயிற்சிப் போதனாசிரியர் பயிற்சியால் பெற்ற ஆசிரியத்துவமும், அவரை கல்விச் சமுதாய வளர்ச்சியில் தனிச்சிறப்புடன் திகழ வழி செய்ததெனலாம்.

உடற்கல்விப் பெரும் பரப்பின் ஆதார அலகான உடற்பயிற்சித் துறையைத் தனதாக்கிக் கொண்டு, தான்கற்பித்த பாடசாலைகளைத் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டச் செய்தமை போற்றுதற்குரியது.

வட்டார, மாவட்ட, தேசிய வெற்றிகளை ஆராயுமிடத்து ஆசிரியரின் போதனாமுறைகள் மாணவர்களுக்கு கவர்ச்சியும், பயனும் தருவனவாக அமைந்தமையும், மிருதுவாக்கப்பட்ட பயிற்சிகளில் மாணவர்களின் விருப்பும் உணர்வும் ஆழப்பதிந்தமையும் ஆசிரியர் - மாணவர் தொடர்பு இதமாக அமைந்ததனால் ஆசிரியர்மீது பற்றும் விருப்பமும் கொண்ட மாணவர்குழுக்கள் உருவாகியமையும், அப்பற்றினை வளர்க்க ஆசிரியர் தனது

(4 ஆம் பக்கம் பார்க்க)

— க. வை. தனேஸ்வரன்,
இளைப்பாறிய பிரதி அதிபர்,
யாழ் கனகரத்தினம் ம. ம. வி.

## சேவை மனப்பாங்கு மிக்க ஆசிரியர்

யாழ்ப்பாண மாவட்ட உடற்கல்வி விளையாட்டுத்துறை சார் குடும்பத்தின் மூத்த உறுப்பினர்களில் ஒருவராக இருந்து, நாம் எவ்வாறு நம் நடத்தைகளில் உதாரண புருஷர்களாக இருக்க வேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தவர் திரு. தம்பித்துரை.

அவர் பெரிய பாடசாலைகளைத் தேடியவர் அல்லர். தான் கற்பித்த பாடசாலைகளில் தமக்குப் பெருமையைத் தேடாது, தமது பேராற்றலால் — திறமையால் — அப்பாடசாலைகளுக்குப் பெருமை தேடித்தந்தவர்.

உடற்பயிற்சி அணிகளைப் பயிற்றுவித்து தேசிய மட்டத்திலே பல பரிசில்களை — அதுவும் முதலிடங்களை — பெற்றுத்தந்து தன் திறமையை நிரூபித்தவர் இவர். தனி ஒரு விளையாட்டு வீரனை உருவாக்குவதிலும் பார்க்க பலர் பங்குபற்றும் ஓர் அணியை — ஒரு தடவையல்ல பல தடவைகள் பல அணிகளை — உருவாக்கிய ஒரு சாதனை வீரன்.

ஆசிரியத் தொழிலிலிருந்து ஓய்வு பெற்ற பின்பும் தனது திறமையை எமது சிறார்களுக்குத் தொடர்ந்தும் அளிக்கும் இவரது சேவை மனப்பான்மை மிகவும் பாராட்டுதற்குரியது.

இவரது செயற்பாடுகள் இத்துறையிலிருக்கும் எமக்கு நல்ல முன்னுதாரணம் என்றால் மிகவும் பொருந்தும். செய்யுந் தொழிலே தெய்வம் என அல்லும் பகலும் அயராதுழைக்கும் இவர் எல்லா நலன்களும் பெற்று, என்றும் இளைஞனாகத் தனது சேவையைத் தொடர உளம் உருக வாழ்த்துகின்றேன்.

த. [illegible]
(உதவிக் கல்விப் பணிப்பாளர்,
உடற்கல்வி)

விளம்பர இலக்கம்: (கி-5928)

## ஆசிரியப் பணியில் பல்துறை வல்லுநர்

திரு. அ. தம்பித்துரை இளைப்பாறிய உடற் பயிற்சி ஆசிரியர் அவர்கள் 1955ஆம் ஆண்டு முதல் 81ஆம் ஆண்டு வரை எமது கல்லூரியில் உடற்பயிற்சி ஆசிரியராகக் கடமை புரிந்தவர்.

உடற்பயிற்சியை மட்டும் மாணவருக்குக் கற்பிப்பதோடு நில்லாமல் தமிழ், சமயம், சுகாதாரம், சித்திரம் ஆகிய பாடங்களையும் மேல் வகுப்புக்கள் வரை கற்பித்துப் பெரும் பரீட்சைகளில் நல்ல பெறுபேறுகளையும் பெற்றுத் தந்தார். பேச்சுப் போட்டிகளுக்கு மாணவர்களைப் பயிற்றுவித்து, வடமாகாண ஆசிரியர் சங்கம் நடத்திய போட்டிகளில் பங்குபற்றச் செய்து, முதலிடங்கள் பெறச் செய்த பெருமையும் அவரைச் சாரும்.

கல்லூரியில் பல நாடகங்களைத் தயாரித்து தாமும் சேர்ந்து நடித்து பலரது பாராட்டுக்களையும் பெற்றவர். 'மண்சுமந்த மதுரை நாயகன்'' என்ற நாடகத்தில் பிட்டுவிற்கும் நரை மூதாட்டி செம்மனச் செல்வியாகவும் "சம்பளம் வரட்டும்'' என்ற நகைச் சுவை நாடகத்தில் வீட்டுப் பெண் மீனாட்சியாகவும் அவர் பாத்திரமேற்று நடித்தும் பலராலும் பாராட்டுப்பெற்றமையை எம்மால் என்றும் மறக்க முடியாது.

மெய்வல்லுநர் போட்டிகளில் மாணவர்களை மாவட்ட ரீதியில் பங்குபெறச் செய்து பல முதலிடங்களைப் பெறவைத்ததோடு — உடற் பயிற்சிப் போட்டிகளில் யாழ். மாவட்டப் பாடசாலைகளை அகில இலங்கையில் பலமுறை முதலாம் இடங்களைப் பெறவைத்து சாதனை புரிந்

[4ஆம் பக்கம் பார்க்க]

அ. மகாதேவன்,
இளைப்பாறிய கொத்தணி அதிபர்,
மல்லாகம்.

சிறப்பிதழ் வெளியீடு:
வளர்பிறை
விளையாட்டுக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்குண்டு

அடை வைக்க உகந்த சிக்கி, பன்ரம், பாமாங், பிபங்லர் முட்டைகள் உடன் விற்பனைக்குண்டு. 70/6, சச்ச மோட்டை வீதி, யாழ்ப்பாணம். (27297)

சகல விதமான வீட்டுத் தளபாடங்கள், ஓகன், கிற்றார், வயலின், மெலோடிக்கா, கால் ஆர்மோனியம், கோழிக்கூடு, நாய்க்கூடு, தையல்மெஷின், றேடியோ, T. V. செரமிக் ஜாடிகள், வாட்டர்பம், காப்பெற் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- 275, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (27301)

### விற்பனையாகிறது

தமிழ் இலக்கியம் ஆண்டு 10—11 விளக்கக் குறிப்புகள் கம்பராமாயணம், நள வெண்பா நாலடியார் ஆசாரக் கோவை பெரியபுராணம் இயற்கையைக் கவிதையில் விடுத்த ஒளவை, நன்றிப் பெருக்கு மேலும் பயிற்சி வினாக்களுக்கு விடைகள் உள்ளடங்கியது. ஆக்கம்: தமிழவேள். பூபாலசிங்கம் புத்தகசாலை. (இ-6055)

### அச்சுக்கோப்பாளர் தேவை

அச்சுக்கோர்ப்பாளர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். நேரில் வரவும். பாரதி பதிப்பகம், (A.B. Printers), 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (இ-6077)

### ENGLISH

G. C. E.(O/L)93 Spoken-English, with Grammar, G. A. Q. (E. S. L.) 94, ஆகியவற்றிற்குரிய விசேட ஆங்கில வகுப்புகளின் புதிய பிரிவுகள் [14-9-93] செவ்வாய் ஆரம்பமாகின்றன. மாணவர்களின் வசதிக்கேற்ப நேர அட்டவணை வழங்கப்படும். தொடர்பு: R. சிவலிங்கம், (Dip-in-Eng.) புதிய ஆங்கில கல்வி நிலையம், 82, பருத்தித்துறை வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம். (இ-6095)

### குளிர்பானங்கள்

Sunrise குளிர்பானங்கள், கோடியல்கள் சுத்தமானவை சுவையானவை பருகிக் களிப்படைவீர். தயாரிப்பு விநியோகம்: Siva Industries, 35/3, Colombagam Road, Chundukuli. (இ-6049)

### இலவச திருமண சேவை

32 வயது, திருவோணம் செவ்வாயற்ற கனடா மணமகனுக்கு மணப்பெண் தேவை. விவரகம் இலங்கையில் அல்லது Sponsoring செய்யலாம். சகல மணமக்களுக்கும் தொடர்பு: ஞாயிறு காலையில்: து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (27298)

### திருமண சேவை

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாக சொல்கிறார்கள் ஆனால் எங்களாலும் நிச்சயிக்கப்படுகின்றன என்கிறார்கள் தமிழ் பல்துறை சேவையினர். உங்கள் பிள்ளைகளின் வளமான, சுபீட்சமான வாழ்வுக்கு எம்மை நாடுங்கள்! "தமிழ் பல்துறை சேவையாளர்" ஆ. சி. தமிழ்ச்செல்வன், இல. 812C, பருத்தித்துறை வீதி முத்திரைச்சந்தை, யாழ்ப்பாணம். (27294)

### புலமைப்பரிசில் வகுப்புகள்

4ஆம், 5ஆம் ஆண்டுகளுக்கு 6ஆம் ஆண்டிற்கான அனுமதி வகுப்புகள் ஆரம்பம்: 16-09-93 பிற்பகல் 3 மணி. இடம்: 164, கோயில் வீதி, யாழ்ப்பாணம். ஆசிரியர்: பொ. சுப்பிரமணியம். (27295)

## தனி முத்திரை....

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடப்பரப்பில் ஆழமான புலமையையும் உத்தம இலட்சியங்களையும் கொள்கையாக வகித்துக்கொண்டமையும் புலப்படுகின்றன.

ஆசிரியரிடம் மாணவருக்கு மிகுந்த நம்பிக்கை தோன்றியதும் வெற்றிச் சாதனைகள் தானாக வந்து குவியும்

ஒன்றோடொன்று தொடர்புடைய உடற்பயிற்சி, உளப்பயிற்சி ஆகிய பயனுள்ள கல்விச் சேவையினை அவர் தொடரட்டும்.

இவர் வழி வந்த தசைப்பயிற்சி துறை இன்று பெண்கள் அணிக்குச் சென்று சேர்ந்திருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

உடற்பயிற்சித் துறையில் அவர் பதித்த தனி முத்திரை நீடும் நிலைக்கும். மணிவிழாக் காணும் நல்லாசிரியர் நீடு வாழ்க.

"உள்ளத்துறுதி உடலுறுதிக் கண்ணது"

## ஆசிரியப் பணியில்.....

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தவர்.

யாழ்நகரில் மகேஸ்வரம் இந்துக் கல்லூரி என்ற ஒரு பாடசாலை இருப்பதை தென்னிலங்கை மக்களும் அறிய வைத்தவர். எங்கள் கல்லூரியின் கொடியை அகில இலங்கையின் பல பாகங்களிலும் பறக்கச் செய்த பெருமையும் திரு. தம்பித்துரையையே சாரும்.

எமது கல்லூரியில் சாரணர் இயக்கத்தை ஆரம்பித்து வைத்து, தாமே சாரண ஆசிரியராக இருந்து முதலாம் வகுப்புச் சின்னம் பெற்ற சாரணர்களையும் அரசிச் சாரணர்களையும் உருவாக்கித் தந்த பெருமையும் அவரையே சாரும்.

எங்கள் பாடசாலைக்கு ஒரு நிரந்தர விளையாட்டு மைதானம் இல்லாதிருந்தும் தமது விடாமுயற்சியாலும் அயராத உழைப்பினாலும் அவர் ஈட்டிய பெறுபேறுகளை என்றென்றும் எமது பாடசாலை மட்டுமல்ல மல்லாக மக்களும் மறக்கமாட்டார்கள்.

தம்பணியைச் செவ்வனே உணர்ந்து செயல் புரியும் கடமை வீரனுக்கு விழா எடுப்பது மிகவும் பொருத்தமானது; பாராட்டத்தக்கது. அவர்கள் நீடித்த காலம் நிறைசுகத்துடன் வாழ்ந்து எல்லா வளங்களும் பெறவி நாயகப் பெருமானை வேண்டித் துதிக்கின்றேன்.


## DAY CLASS

கணக்கியல் A/L 94

ஆரம்பம்: 1993 — 09 — 16 (வியாழன்) மதியம் 12 மணி


D. SAM

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கானது

76/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (27303)


பசுமையான பாச நினைவுகளுடன்

## 14ஆவது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## கார்த்திகேசு வைத்தியலிங்கம்

(உரிமையாளர், வைத்தியலிங்கம் மரக்காலை, யாழ்ப்பாணம்)

தோற்றம்: 17 — 07 — 1913

மறைவு: 20 — 08 — 1979

திதி: 14 — 09 — 1993

நீங்காத நினைவலைகள்
எம் நெஞ்சில் அலைமோத
அப்பாவே நீர் எம்மை
விட்டேகிச் சென்றீரோ!
கண்ணின் மணிபோல
காத்திருந்தீர் எமையெல்லாம்
எண்ணிக் களித்தோமே
எந்நாளும் எமதென்றே
பாரினிலே எமையெல்லாம்
பண்புடனே வளர்த்தெடுத்தீர்
சீருடனே எமையாக்கி
சிறப்புறவே வாழ வைத்தீர்
மண்ணில் எமைவிட்டு
மலரடியை நாடினீரோ
நன்றியுடன் நினைத்திருப்போம்
நாளெல்லாம் உமையெண்ணி.

உங்கள் நினைவில் வாழும்!

அன்பு மனைவி, ஆருயிர்ச் செல்வங்கள்,
அன்பு மருமக்கள், ஆசைப் பேரப்பிள்ளைகள்,
மற்றும் உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

110, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (27285)

## 7-ம் ஆண்டு நினைவு



## கந்தையா நல்லம்மா


7 வருடங்கள் அல்ல கோடி வருடங்கள் சென்றாலும் உங்கள் அன்பையும், பாசத்தையும், மறக்க முடியாது.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

க. பூபாலசிங்கம்
(மகன்)
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

வொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு.
(இ 6080)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 15 — 09 — 1922 | 15 — 08 — 1993 |

## காசிப்பிள்ளை முத்தையா

(உரிமையாளர் கோமதிஸ் ஸ்ரோர் - மன்னார்)

எங்களனைவரையும் நிலையாய் பிரகாசமாய்
விட்டுப் பிரிந்த எம் அன்புத் தெய்வமே!
பேச்சொன்றும் பேசாமல் பிள்ளை முகம்
பாராமல் மூச்சடக்கி விட்டனையோ
வஞ்சமிலா முகமும் கள்ளமிலா உள்ளமும்
என்றென்றும் எம் நெஞ்சை விட்டகலா
அரை நிமிடத்தில் அனைவரையும் மறந்தனையோ
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
கண்ணீர் பூக்கொண்டு பிரார்த்திக்கின்றோம்.

இன்று (14 - 09 - 1993) செவ்வாய் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் உற்றார், உறவினர், நண்பர்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்:

மனைவி: முத்தையா சின்னத்தங்கச்சி,
பிள்ளைகள்: கோமதி, கேதீஸ்வரி, ஸ்ரீதரன் (சுவிஸ்), சுமாஜினி (யா. இ. ம. கல்லூரி A/L 93 வர்த்தகம்)
மருமக்கள்: பவளகுமார் (கொழும்பு), ஜெகநாதன் (நாதன் வெல்டிங் வேக்ஸ், உரும்பராய்)
பேரப்பிள்ளைகள்: திவாகர், சஞ்ஜீவன்;
உற்றார், உறவினர்கள்.

24/8, சிவப்பிரகாசம் வீதி,
மதவடி லேன்,
யாழ்ப்பாணம். (6476)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அண்ணாந்து பார்க்க நேரும்!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஐக்கிய நாடுகள் சபையினதோ அல்லது அது போன்ற வெளிநாட்டு அமைப்பினதோ தலையீட்டை அனுமதிக்க வேண்டாம்.

இவ்வாறு உலக பௌத்த சகோதரத்துவ அமைப்பு ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பி வைத்திருக்கிறதாம். பெயர் உலக பௌத்த என்று ஆரம்பித்தாலும் குறிப்பிட்ட அமைப்பு ஸ்ரீலங்காவில் இயங்கும் ஒன்றாகவே இருக்கும் என்பது ஊகிக்கக் கூடியதாகும்.

இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதில் வெளியார் தலையீடு அல்லது மத்தியஸ்தத்துக்கு இடம்கொடுக்கக் கூடாது என்பதில் ஸ்ரீலங்கா அரசாங்கம் தீவிர அக்கறை கொண்டிருக்கிறது என்பது ஏற்கனவே வெளிவந்த விடயம். நோபல் பரிசு பெற்ற நான்கு அறிஞர்கள் சமர்ப்பித்த யோசனையை ஜனாதிபதியும், பிரதமரும் எடுத்த எடுப்பிலேயே தூக்கி எறிந்து நிராகரித்தமை அதற்குப் போதிய சான்றாகும்.

அரசாங்கமோ அல்லது ஜனாதிபதி பிரதமரோ இந்த முடிவை தமது சொந்தத்தில் எடுத்தார்கள் என்று கூறமுடியாது. இது தென்னிலங்கையில் ஆதிக்கம் செலுத்தும் சிங்கள — பௌத்த பேரினவாதத்தின் முடிவு என்பதே பொருத்தம்.

எனவே பௌத்த அமைப்பின் மகஜரானது, ஜனாதிபதி மற்றும் பிரதமர் (மொத்தத்தில் அரசாங்கம்) ஐ நா. தலையீட்டை நிராகரித்தமையை சரியாக்கும், ஆதரவு தெரிவிக்கும் ஒன்று எனக் கொள்ளலாம்.

தென்னிலங்கைப் பத்திரிகைகள் பலவும் வெளியார் தலையீட்டுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்ற கருத்தையே வலியுறுத்தி வருகின்றன. ஒட்டு மொத்தத்தில் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில் வெளியார் — மூன்றாமவர் — பங்கேற்பதை தென்னிலங்கையர்கள் விரும்பவில்லை என்பதாகும். இவர்கள் போடும் சன்னதத்தைப்பார்த்தால் இனப் பிரச்சினை விவகாரத்தில் வெளியார் தலையிட வேண்டும் என்று தமிழர்கள் ஏதோ வலிந்து விரும்புகிறார்கள் என்ற ஒரு காட்சியை உண்டாக்குகிறது.

ஆனால் தங்கள் பிரச்சினையைத் தீர்த்து வைக்க மூன்றாவது சக்தி ஒன்று தலையிட வேண்டும் என்பது தமிழர் விருப்பமல்ல. இயன்றளவு இரு சாராருமே பேசித் தீர்த்துக்கொள்வதையே தமிழர்களும் விரும்புகிறார்கள் தமிழர்களின் இந்த நிலைப்பாட்டைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு அரசு — சிங்கள பௌத்த பேரினவாதம் – இராணுவத் தீர்வையே தனது முழு நோக்கமாகக் கொண்டு செயற்படுகிறது. அரசியல் தீர்வு, சனநாயக வழிமுறை என்பன எல்லாம் வெறும் மேனி மினுக்குக்கே.

தமிழர்கள் தங்கள் உரிமைகளை சாத்வீக ஆயுதம் கொண்டு வென்றெடுக்கவே முதலில் திட்டமிட்டனர். அதன் வழி செயற்பட்டனர். அதனை ஒரு பலவீனமாக அரசு எடுத்துக்கொண்டு அடக்குமுறையில் ஈடுபட்டது. அதனால் தமிழர்கள் ஆயுதப் போராட்ட வழிக்கு நிர்ப்பந்திக்கப் பட்டனர் இங்கே தவறிழைத்தவர்கள், சந்தர்ப்பத்தை நழுவவிட்டவர்கள் சிங்களத் தலைவர்களே.

அது போலவே, தமிழரும் சிங்களவருமாகப் பேசி பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற நிலையை அரசின் கடந்த மூன்று வருடப்போக்கு முற்றாக இல்லாமற் செய்து விட்டது. இப்போதும் தவறு சிங்களவர்களுடையதே அன்றித் தமிழர்களுடையது அல்ல. ஸ்ரீலங்கா அரசுடன் பேசித் தமது விடுதலையைக் காண முடியாது என்பதால் மூன்றாமவர் மூலம் அழுத்தமும் நெருக்குதலும் கொடுக்கும் வழிமுறைக்கு தமிழர்கள் நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

எனவே இந்தக் கட்டத்திலேனும் அரசு ஆழமாகச் சிந்தித்துச் செயற்படாவிடில் வழமை போலவே அவகாசத்தைத் தவற விட்ட நாளைய நிலையில் பின்னர் அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்க நேரிடும்.

---

ஜனாதிபதி விஜேயின்

# இனப்பிரச்சினை இல்லை என்ற கூற்றுக்கு இராணுவம் ஆதரவு

லண்டன், செப். 14

இலங்கையில் இனப்பிரச்சினை கிடையாது பயங்கரவாதப் பிரச்சினை தான் உள்ளது என்று ஜனாதிபதி விஜேதுங்கா அடிக்கடி இப்போது கூறிவருகின்றார்.

ஜனாதிபதி விஜேதுங்காவின் இக்கடும் போக்கையும் விடுதலைப் புலிகளை நசுக்க வேண்டும் என்ற உறுதியையும் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இலங்கை இராணுவம் வரவேற்றுள்ளது.

பி.பி.ஸி. கொழும்புச் செய்தியாளர் ஜியார்ஜ் நூஸ் அனுப்பிய செய்திக் கண்ணோட்டத்தில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

பிரச்சினைக்குரிய மாவட்டங்களில் வாழும் தமிழ் மக்களின் மனித அடிப்படை உரிமைகள் இனிமேல் மேலும் கடுதலாக அலட்சியம் செய்யப்படலாம் என்று குடியுரிமைக் குழுக்கள் பல ஏற்கனவே எச்சரிக்கை விடுத்துள்ளன.

ஜனாதிபதி விஜேதுங்காவின் கருத்துக்கள் பலரை வியக்க வைத்தன. ஆனால் இப்போதோ நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் ஆளும்கட்சி உறுப்பினர்களே ஜனாதிபதியின் கருத்துக்களை ஆதரித்து குரல் எழுப்பி வருகின்றார்கள்.

ஒருரே கருத்தை அடிக்கடி கூறி வந்தால் மக்கள் அதனை நம்பத் தொடங்கி விடுவார்கள் என்ற அடிப்படையில் தான் நாட்டில் இருப்பது இனப்பிரச்சினை அல்ல! பயங்கரவாதப் பிரச்சினைதான் இருக்கிறது என்ற கருத்து பரப்பப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெற உள்ளது. அதனால் இப்போதைக்கு இனப்பிரச்சினை பின்னால் தள்ளப்பட்டு விட்டது.

ஜனாதிபதியின் கருத்து தெற்கில் அவருக்கு ஆதரவைத் திரட்டிக் கொடுக்கக் கூடும். ஆனால் மொத்த சனத்தொகையில் 20 சதவிதமாக இருக்கும் தமிழ் மக்கள் இந்தக் கருத்தினால் விரக்தியடையலாம். இலங்கையின் பூர்வீக வரலாற்றையே அலட்சியம் செய்து ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்துக்களினால் தமிழ் மக்கள் சலிப்படையக் கூடும் — இவ்வாறு அக்கண்ணோட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### விதை கச்சான்

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்தினால் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட 350 கிலோ விதை கச்சான் விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக இந்த விதை கச்சானை துரிதமாக, நியாய விலையில் விநியோகிப்பதற்கு மேற்படி சமாசம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (த-17)

### உதவிப்பணம்

அச்சுவேலி தபால் நிலையத்தில் மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்படுகின்றன.

---

# நெருங்கி வந்த கடற்படையினர் எம் மீது கிரனேட்டை வீசினர்

## தப்பி வந்தவர் கூறுகிறார்

வடமராட்சி, செப். 14

எமது கட்டுமரத்தை நெருங்கி வந்த கடற்படையினர் எம்மை நோக்கி கிரனேட்டை வீசித் தாக்கினர்.

— இவ்வாறு தெரிவித்தார் இராயப்பு குணம் (வயது 22).

வடமராட்சிக் கடலில் நேற்றுக் காலை கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி காயமுற்ற அவர் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை விவரிக்கையிலேயே இப்படிக் கூறினார்.

ஒரு பிள்ளையின் தந்தையான அவர் மேலும் கூறியதாவது:-

நானும் தேவதிரவியமும் ஒரு கட்டுமரத்தில் தொழிலுக்குச் சென்றோம்.

அதிகாலை 4 45 மணிக்கு நாம் வீசிய 29 வலைகளையும் இழுத்துக் கொண்டிருந்தோம்.

சுமார் ஐந்து மணியளவில் இரு விசைப்படகுகளில் கடற்படையினர் நெருங்கி வருவதைக் கண்டோம். உடனே எமது வலைகளை அப்படியே கைவிட்டுவிட்டு கடலுக்குள் குதித்து கட்டுமரத்துக்குக் கீழ் — கட்டுமரத்தின் முன்னும் பின்னுமாக — ஒளிந்து கொண்டோம்.

எம்மை நெருங்கி வந்த கடற்படையினர் எமது கட்டுமரத்தை நோக்கி கிரனேட் ஒன்றை வீசினர்.

கிரனேட் தேவதிரவியத்தின் நெஞ்சின் மீது கட்டுமரத்தை அண்டி விழுந்து வெடித்தது. அவர் எந்தவித சத்தமுமின்றி அப்படியே உயிரிழந்தார் என்பதை உணர்ந்தேன். கட்டுமரத்தைப் பிடித்திருந்த அவரது கைகள் மெல்ல மெல்ல நழுவின.

அவரது நெஞ்சிலிருந்து பீறிட்ட இரத்தம் கடல் நீரில் படர்ந்தது; அதனைப் பார்க்கும் போது தண்ணீருக்குள் இறைச்சியை வெட்டிப் போட்டது மாதிரி இருந்தது.

தேவதிரவியம் அப்படியே கடலில் மூழ்கிப் போனார்.

வெளிச்சம் பாய்ச்சி, பீரங்கி வேட்டுக்களைத் தீர்த்த படையினர் கிரனேட்டுக்களையும் வீசினர்.

படையினர் விலகிச் சென்றதும் கட்டுமரத்துக்குக் கீழ் பதுங்கியிருந்த நான், கட்டுமரத்தில் ஏறி அதனைப் பார்த்தேன். கிரனேட், பீரங்கித் தாக்குதல்களினால் கட்டுமரம் பிளந்து கிடந்தது.

கட்டுமரத்தை அப்படியே விட்டு விட்டு கரையை நோக்கி நீந்தத் தொடங்கினேன். வழியில் மற்றொரு கட்டுமரத்தில் வந்தோர் என்னைக் காப்பாற்றி கரை சேர்த்தனர்.

சில மணி நேரம் கழித்து கடலுக்குள் சென்று தேடியவர்கள் எமது சிதைந்த படகைக் கூடக் காணாது திரும்பினர். எமது படகு கடலுக்குள் மூழ்கியிருக்கும். — என்றார்.

தலையில் காயமடைந்த இராயப்பு குணம் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார். (உ-173)

---

### தியாகி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதி.

★ கரவெட்டி — தென். கிழக்கு வர்த்தக சங்கம், சாமியன் அரசடி.

★ உடுப்பிட்டி — உடுப்பிட்டி மத்தி, வைரவர் கோவிலடி.

★ பருத்தித்துறை — அல்வாய் முத்துமாரியம்மன் கோவிலடி.

★ பளை — பளை பிரதேச சபைக்கு முன்னால்.

★ கொடிகாமம் — கொடிகாமம் ரயில் நிலைய அருகாமை.

★ சாவகச்சேரி — மனிகுணாய் பிள்ளையார் கோவில் முன்றில் (நுணாவில் 190 ஆம் கட்டை).

★ கைதடி — கைதடி சந்திக்கு அருகாமையில்.

★ நீர்வேலி கோட்டம் — நல்லூர் கோவில் முன்றில்.

நாளை சிரமதானப் பணிகள் நடைபெறும் இடங்கள் வருமாறு:-

★ சண்டிலிப்பாய் — பிரான்பற்று — முல்லையடி வீதி துப்புரவு செய்தல்.

★ கரவெட்டி — அம்பன் மருத்துவமனை சுற்றாடல் துப்புரவு செய்தல்.

★ உடுப்பிட்டி — அச்சுவேலி பாடசாலைக்கு முன்னுள்ள — மாவீரர்கள் படம் வைத்துள்ள — இடங்கள் துப்புரவு செய்தல்.

★ பருத்தித்துறை — மந்திகை ஆதார வைத்தியசாலை சுற்றாடல் மற்றும் உட்புறம் துப்புரவு செய்தல்.

(உ-8-17)

---

### மீனவரை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிடித்துக்கொண்டிருந்த மீனவர்கள் மீது பீரங்கித் தாக்குதலைத் தொடுத்த வண்ணம் வந்த கடற்படையினரை நோக்கி பொலிகண்டி — வல்வெட்டித்துறை கடல் பகுதியில் வைத்து கடல் புலிகள் தாக்கினர்.

கடற்புலிகளின் தாக்குதலை அடுத்து கடற்படையினர் தமது படகுகளை பின்வாங்கச் செய்து — ஆழ்கடலுக்கு ஓட்டிச் சென்று — அங்கிருந்து மேற்குப் பக்கமாக காங்கேசன்துறைப் பகுதிக்குக் கொண்டு சென்றனர்.

(உ-8-173-155)

---

### கடற்படையின்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெயர்ந்து சக்கோட்டையில் வசித்து வந்த — 11 பிள்ளைகளின் தந்தையான — மடம் தேவதிரவியம் வயது 50) என்பவரே உயிரிழந்தார்.

படையினரின் தாக்குதலை அடுத்து அவரின் சடலம் கடலில் மூழ்கியது.

அவருடன் தொழிலுக்குச் சென்ற இராயப்பு குணம் (வயது 22) என்பவர் காயத்துடன் நீந்திக் கரை சேர்ந்தார். இவர் மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

தொண்டமானாறுப் பகுதியில் படையினர் நடத்திய தாக்குதலில் — மூன்று பிள்ளைகளின் தந்தையான — தர்மலிங்கம் இரத்தினசபை (27 வயது) என்பவர் உயிரிழந்தார்.

இவரது சடலமும் கடலுக்குள் மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவருடன் கூடத் தொழிலுக்குச் சென்ற ரவிச்சந்திரன் (பப்பு) என்பவர் கடலுக்குள் குதித்து நீந்திக் கரை சேர்ந்தார்.

(உ-8-173-155)

---

## தொழிலாளர் பிரச்சினை பற்றிப் பேச்சு

கொழும்பு, செப். 14

மத்திய மாகாணத்தில் தொடங்கலந்த, உஹற்றஹ கனிவளச் சுரங்கங்களில் — 2 ஆயிரத்து 400 அடி ஆழத்தில் இருந்தவாறு — வேலை நிறுத்தம் செய்து வரும் 400 தொழிலாளர்களின் பிரச்சினை குறித்து நேற்று மாலை தொழிற்சங்க மட்டத்தில் பேச்சுகள் நடைபெற்றன.

தொழிலாளர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாவிட்டால், தொழிலாளர்கள் சாகும்வரையான உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பர் என நேற்று முற்பகலில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் பிற்பகலில் சுரங்க நிர்வாகத்தினருக்கும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுகளில் இணக்க நிலை ஏற்பட்டதாக நேற்றிரவு பி.பி.ஸி. அறிவித்தது.

எனினும் காணப்பட்ட இணக்கத்தினால் தொழிலாளர் பிரச்சினை முற்றாகத் தீர்க்கப்படவில்லை என்றும் — தொழிற்சங்க நடவடிக்கை தொடரக் கூடும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

---

### கடல்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறுப்பதாகவும் இந்தியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இரு தரப்பு கடல் பகுதி பற்றிய உடன்படிக்கைகளை இலங்கை தன்னிச்சையாக — தனக்குச் சாதகமாக — மாற்றிக் கொள்விரும்புகிறது என்றும் இந்தியா சுட்டிக்காட்டியிருக்கிறது.

ஸ்ரீலங்கா அரசு தனது பிரகடனம் குறித்து மறு பரிசிலனை செய்ய வேண்டும் என்றும் இந்தியா கோரியுள்ளது.

பாக்கு நீரிணையில் இந்திய மீனவர்களின் மீன்பிடிப்பதை இத் தடைச்சட்டம் கடுமையாக பாதிக்கும் என்றும் இந்தியத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### இஸ்ரேல்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஒப்பந்தத்தின் சாட்சிகளாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வோறன் கிறிஸ்தோபரும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் அந்தரே குஸ்றேயும் ஒப்பமிட்டனர்.

பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸீர் அரபாத், இஸ்ரேல் பிரதமர் யிட்ஷாக் ரபீன், அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன், முன்னாள் ஜனாதிபதிகள் ஜோர்ஜ்புஷ், ஜிம்மி காட்டர் மற்றும் பன்னிரண்டு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள், இராஜதந்திரிகள் உட்பட சுமார் 300 அதிதிகள் இந்நிகழ்வில் பங்குபற்றினர்.

---

### கொலை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் மரணமும் கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மரண விசாரணை நடத்திய கம்பஹா பதில் நீதிவான் இத்தீர்ப்பை வழங்கினார்.

சிறை அதிகாரிகள் எல்லை மீறிச் செயற்பட்டனரா என்பது குறித்து விசாரணை நடத்துமாறு சட்டமா அதிபருக்கு நீதிவான் பணிப்புரையும் விடுத்தார். [உ-6]

---

**உழவும் தொழிலும் இன்றேல்-நாட்டில் உயிரும் உடலும் ஏது**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## செல்வி சிவலிங்கம் உஷா

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சம்பந்தப்பிள்ளையார் வீதி, ஆனைக்கோட்டை வடக்கில் வசிப்பவருமான திரு. சிவலிங்கம் (நித்தி) அவர்களின் அன்புப் புதல்வி செல்வி உஷா நேற்று (13-09-1993) காலமாகி விட்டார்.

அன்னார் றமேஸ் (கனிஸ்), சுபாஸ், றூபதாஸ், றஜிதா, றாயிதா ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று (14-09-1993) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அரயான்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. சிவலிங்கம் (தகப்பன்)

சம்பந்தப்பிள்ளையார் வீதி,
ஆனைக்கோட்டை வடக்கு,
ஆனைக்கோட்டை. (27299)

## லூசி இன்னம்மா தேவசகாயம்

திருமதி லூசி இன்னம்மா தேவசகாயம் (இளைப்பாறிய ஆசிரியை நவாலி அ. மி. த. க பாடசாலை) நேற்று (13-09-93) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற அந்தோனி தேவசகாயத்தின் அன்பு மனைவியும், நேசமணி, செயமணி ஆகியோரின் அன்புத் தாயாரும், வேலுப்பிள்ளை சபாரத்தினம், காலஞ்சென்ற அந்தோனி அல்பிறட் (அருணாநாயகம்) ஆகியோரின் மாமியும், சுரேஷ்குமார், சதீஷ்குமார் ஆகியோரின் பேத்தியுமாவார். இவரது நல்லடக்க ஆராதனை அன்னாரது இல்லத்தில் இன்று 14-09-93] காலை 8 30 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. சபாரத்தினம்
(மருமகன்)

நவாலி தெற்கு,
மானிப்பாய். (27308)

## திருமதி சிவபாலசிங்கம் சரஸ்வதி

கொழும்புத்துறையைச் சேர்ந்த திருமதி சிவபாலசிங்கம் சரஸ்வதி (இளைப்பாறிய ஆசிரியை) 10-09-93 இல் கொழும்பில் காலமானார்.

இவர் திரு. சோ. சிவபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், சிவதாசன் (நோர்வே), சிவகணேசன் (கனடா), சிவகுமரேசன் (நோர்வே), சிவப்பிரகாஷ் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமதி (நோர்வே), கௌசல்யா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 13-09-93 இல் கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

சி. கந்தசாமி (கி. சே)
(சகோதரன்)
முருகமூர்த்தி வீதி,
சங்கானை.

சோ. சிவலோகம்
(மைத்துனர்)
29, புங்கன்குளம் வீதி,
கொழும்புத்துறை.

(27309)

## திருமதி இராஜேஸ்வரி சிவப்பிரகாசம்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவரும் தற்போது மஞ்சவனப்பதி வீதி கொக்குவிலில் வசிப்பவருமாகிய இராசரத்தினம் சிவப்பிரகாசம் (P.H.I) அவர்களின் அன்பு மனைவி இராஜேஸ்வரி நேற்று காலமானார்.

இவர் லோஜன் சூரியபிரபா, நிமால் தேவரஞ்சன், நிரோஜனா, ரஞ்சித பத்மஜீவா, ரஜனி ஜீவமித்ரா, பிரின்ஸ் இராஜேன்குமார் (யாழ் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவன் — 1993) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14-9-93) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் "யமுனா", ஆனைக்கோட்டை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
க. சிவப்பிரகாசம்
(கணவர்)

"யமுனா",
ஆனைக்கோட்டை. (27311)

# இன்று

சங்கானை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தேசிய சர்வோதய சிரமதான இயக்கத்தின் பிரதேச நிலைய ஓராண்டு பூர்த்தி விழாவும், உதயக் கண்காட்சியும் இன்று காலை இடம்பெறவுள்ளன.

o o o

வேலணை கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட ஆங்கில தினப் போட்டிகள் இன்று காலை 8.30 மணிக்கு சண்டுக்குளியிலுள்ள சென். ஜோன்ஸ் அக்கடமியில் இடம் பெறவுள்ளது. (உ-30)

# தி. மு. க. மனு நிராகரிப்பு

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் சிலர் மீது ஊழல் குற்றச் சாட்டுகளின் அடிப்படையில் வழக்குத் தொடருவதற்கு முன்னைய தமிழக ஆளுநர் அனுமதி மறுத்ததை ஆட்சேபித்து திராவிட முன்னேற்றக் கழகம் தாக்கல் செய்திருந்த ரிட் மனுவை சென்னை உயர்நீதி மன்றம் நேற்று தள்ளுபடி செய்தது.

அரசமைப்பின்படி ஆளுநரின் உரிமையை நீதிமன்றத்தின் விசாரணைக்கு உட்படுத்த முடியாது என மாநில தலைமைச் சட்டத்தரணி வெளியிட்ட வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

# நாளை

மருதனார்மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தின் இரண்டாம் வருட விவசாய டிப்ளோமா பயிற்சி நெறியின் ஆரம்ப வைபவம் நாளை பிற்பகல் 3 மணியளவில் வரணி மிஷன் பண்ணையில் நடைபெறும். தென்னிந்திய திருச்சபையின் யாழ். பேராயர் வண. பிதா எஸ். ஜெபநேசன் பயிற்சி நெறியை ஆரம்பித்துவைப்பார்.

o o o

ப. நோ. கூ. சங்கங்களுடனான கலந்துரையாடல் நாளை புதன் பிற்பகல் 2 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், ப.நோ.கூ. சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்கள் ஆகியோரை அக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் கேட்டுள்ளார்.

## போர்முனை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரிகளுக்கு அவர்கள் சேவையில் மூப்புடையவர்களாக இருப்பினும் பதவி உயர்வு வழங்ககூடாது என்று பணிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, போர் முனைக்குச் சென்று போராடும் சிப்பாய்களுக்கு எந்தக் குறையாடும் இன்றிச் சகல வசதிகளும், சௌகரியங்களும் செய்து கொடுக்கப்பட வேண்டும் எனவும் ஜெனரல் வனசிங்க அதிகாரிகளுக்கு கண்டிப்பான உத்தரவு பிறப்பித்திருக்கிறார். (அ-6)

# 'குமண' நாளை வந்து சேரும்

யாழ்ப்பாணம், செப். 14

உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் உட்பட 8 ஆயிரம் மெற்றிக் தொன் பொருள்களுடன் "குமண" கப்பல் நாளை காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றுக் காலை கொழும்பில் இருந்து புறப்பட்ட இக் கப்பலில் ஆயிரத்து 800 மெற்றிக் தொன் அரிசி, 775 மெற்றிக் தொன் சீனி, மற்றும் பருப்பு வகைகளும், யாழ். போதனா வைத்தியசாலைக்கு மருந்து மற்றும் பொருள்களும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குரிய பொருள்களும் எடுத்து வரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கப்பலில் தபால் பொதிகள் எடுத்து வரப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கி முடிந்ததும் 'குமண' எதிர்வரும் 22ஆம் திகதி முதல் இரு தடவைகள் திருகோணமலைக்கும், பருத்தித்துறைக்கும் இடையில் நோயாளர் பயண சேவையில் ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-8)

# கொழும்பு செல்லும் நோயாளருக்கு

வைத்திய சிகிச்சைக்காக கொழும்பு செல்ல வைத்திய நிபுணர்களால் சிபாரிசு செய்யப்பட்ட நோயாளர்களை கிளினிக் அட்டைகளுடனும் அடையாள அட்டைகளுடனும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தமது பணிமனையில் சமுகமளிக்கும்படி யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாக்கியம் கனகரத்தினம்

காரைநகர் தங்கோடையை பிறப்பிடமாகக் கொண்டவரும், க. க. கனகரத்தினத்தின் (சந்திரதயா - வவுனியா சு. க. கனகரத்தினம் அன்சன் உரிமையாளர்) அன்பு மனைவியாகிய பாக்கியம் 09-09-1993 கொழும்பில் காலமானார்.

அன்னார் கனகேந்திரம்பிள்ளை (நீர்ப்பாசன இலாகா), சிறிஸ்கந்தராசா (பொறியியலாளர்-கனடா) காலஞ்சென்ற சிவராசா, நித்தியானந்தன், சிவானந்தன் (லண்டன்), பவானந்தன், பவானி (லண்டன்), தயானந்தன் (ஜேர்மனி), வசந்தினி (லண்டன்), மகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும், சிவகௌரி, டாக்டர் தவமணி (கனடா), நிர்மலாதேவி, சந்திராதேவி, செல்வராசா (லண்டன்), பெற்றா (ஜேர்மனி), ரவிச்சந்திரன் (லண்டன்) ஆகியோரின் அருமை மாமியாரும், தர்ஷினி, சுதாகரன், ஜெயப்பிரதாபன், கிருசாந்தினி, பஞ்சோ, அகிலா, நிரஞ்சன், சோபனா, டகீரதன், அருண்றாஜ், சிந்துளா, டெனிஸ், டானியல், மயூகரன் ஆகியோரின் அருமைப் பேத்தியும், ஆறுமுகம் செல்லம்மாவின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த ஞாயிறு 12-09-93) பிற்பகல் 2 மணியளவில் கொழும்பில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனகேந்திரம்பிள்ளை
(மகன்)

155/6, காலி வீதி.
பம்பலப்பிட்டி. [27310]

## திருமதி லீலாவதி நன்னித்தம்பி

திருமதி லீலாவதி நன்னித்தம்பி நேற்று (13-9-93) காலமாகிவிட்டார்

இவர் காலஞ்சென்ற நன்னித்தம்பி (ஓய்வுபெற்ற பிஸ்கால்) அவர்களின் அன்பு மனைவியும், சிவலோகநாதன் (ப.நோ.கூ.ச. கன்னாகம் கிளை), சகுந்தலா, வலி (மெக்கானிக்), அருணகிரிநாதன் (முகாமையாளர் விற்பனைத் திணைக்களம், சுன்னாகம்), வசந்தனா, கைலையங்கிரிநாதன் (ஜேர்மனி), நிர்மலா, ஜெயந்தலா ஆகியோரின் அருமைத் தாயாரும், பரமநாயகி, கௌசலாதேவி, நதி, சண்முகராஜா, ஸ்ரீகௌரி (ஜேர்மனி), தர்மலிங்கம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14-9-93) பிற்பகல் 3 00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
பிள்ளைகள்

25, மருதடி றோட்,
யாழ்ப்பாணம். [27312]


# மலிவு விற்பனை

விசேட விலைக் குறைப்புடன்

ஆங்கில மருந்து வகைகள் விற்பனை ஆகின்றன!

சிற்றி ஏஜென்சி

இல. 158, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-6095)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14-09-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.